நாள்: **26.04.2024**

**O.S. No. 44/2023**

**வா.சா.1**

**பெயர்: சிவராமகிருஷ்ணன், த/பெ. சுப்ரமணியன்**

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>** :

எனது வழக்குரை பாரா 5 ல் தாவா இடத்தில் 1ம் பிரதிவாதி அலுவலகத்தால் தீர்மானம் போடப்பட்டு பேருந்து நிறுத்தம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து அதை 2ம் பிரதிவாதி அங்கீகரித்து பேருந்து நிறுத்தம் கட்டுவதற்கு 2ம் பிரதிவாதி அனுமதி அளித்துள்ளதாக வாதி நம்பகமாக அறிய வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பாரா 7 ல் நான் விசாரித்த வகையில் 2, 3 பிரதிவாதிகள் அலுவலகத்தால் பேருந்து நிறுத்தம் கட்டுவதற்கு எந்தவித தொகையோ, அனுமதியோ வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதன் காரணமாக வழக்குரையில் சொல்லியுள்ளதும், நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் 02.06.2023 ம் தேதி திருவாரூர் வட்ட அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலருடன் தாவா இடத்தை அளவீடு செய்ய வந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் வட்டாட்சியரிடமோ அல்லது வட்டார வளர்ச்சி அலுவலரிடமோ ஆட்சேபணை செய்து ஏதேனும் மனு தாக்கல் செய்தேனா என்றால் செய்துள்ளேன். 02.06.2023 ம் தேதியன்றே மனு கொடுத்துள்ளேன். அதன் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி விபரத்தை வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கோயில் தரப்பில் ஏதேனும் ஆட்சேபணை கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. வருவாய் ஆவணங்களில் தாவா இடம் என்ன வகைபாட்டில் உள்ளது என்றால் அரசு கோயில் புறம்போக்கு வகையை சேர்ந்தது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.3 ஆவணம் அனைத்தும் வீட்டு வரி ரசீதுகள் என்றாலும், அதில் மாறுபட்ட கதவு எண்களுடன் உள்ளது என்றாலும் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் அனைத்தும் நஞ்சை நிலங்களுக்கு உண்டானது என்றாலும், தாவா சொத்திற்கானது அல்ல என்றாலும் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள வழக்குமூல தேதியில் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்குமூல தேதியில் 3ம் பிரதிவாதி நேரடியாக தாவா ஸ்தலத்திற்கு வந்து தடை செய்தாரா என்றால் இல்லை. இடத்தை பார்வையிட்டு சென்றார்கள். தாவா இடத்தில் எனக்கு எந்தவித அனுபவமோ, கட்டுமானமோ இல்லை என்றாலும், அரசு புறம்போக்கு நிலத்தில் ஊராட்சி பேருந்து நிலையம் கட்டுவதை தடுக்கும் விதமாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. திருவாரூர் தாலுக்கா எப்பொழுது துவங்கப்பட்டது என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1997 ம் ஆண்டு தேவர்கண்டநல்லூர் கிராமம் திருவாரூர் தாலுக்கா என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றாலும், அந்த வருடத்தில் மேற்படி கிராமம் குடவாசல் தாலுக்காவில் இருந்தது என்றாலும் அதை நான் பார்க்கவில்லை. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்பதாலும், தாவா சொத்தின் அனுபவம் என்னிடம் இல்லாததாலும், 1ம் பிரதிவாதிக்கு எதிராக எந்தவித உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோர இயலாது என்றாலும் சரியல்ல.

**2 , 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம் /- S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.